

தலைமைச் செயலகத்தில் வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நேற்று (07.10.2025) வனத்துறை சார்பில் மூன்றாவது ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையினை 2025 வெளியிட்டார். உடன் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹூ, முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர் ஸ்ரீ நிவாஸ் ரெட்டி, முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா மற்றும் வனத்துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பாக செயல்படுத்தபட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் முன்னேற்றங்கள் குறித்து மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை குழுக் கூட்டம் (DISHA MEETING) அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் குழு தலைவர் எஸ். ஜெகத்ரட்சகன் தலைமையில் நடைபெற்றது. உடன் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், உள்ளாட்சி அமைப்பு தலைவர்கள் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்ட னர்.

### வான்வெளி மற்றும்

# பாதுகாப்பு தொழில்களுக்கான சர்வதேச வணிக மாநாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.10.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற டிட்கோ, BCI ஏரோஸ்பேஸ் (பிரான்ஸ்), மற்றும் தமிழ்நாடு ஏரோஸ்பேஸ் தொழில் வளர்ச்சி கூட்டமைப்பு இணைந்து வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறைக்கான "AeroDefCon 2025" என்ற மூன்று நாள் சர்வதேச மாநாட்டை தொடங்கி வைத்தார்.

இம்மாநாடு, அக்டோபர் 7 முதல் 9 வரை சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும். இம்மாநாடு தமிழ்நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் துறை சூழலுடன் இத்துறை சார்ந்த சர்வதேச நிறுவனங்களை இணைக்கும் முக்கிய தளமாக விளங்கும்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதுகாப்பு தொழில்துறை வழித்தடத் திட்டம், இத்துறையில் சர்வதேச அளவில் கூட்டு திட்டங்கள், முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும். தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தட திட்டம் செயல்படுத்த தொடங்கியதிலிருந்து இதுவரை 23,000 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, இதில் 5,000 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப் பட்டுள்ளது. 2032ஆம் ஆண்டிற்குள் 75,000 கோடி ரூபாய் இலக்கை அடைய தமிழ்நாடு முன்னேறி வருகிறது.

செப்டம்பர் 19இல் Cochin Shipyard மற்றும் Mazagon Dock Shipbuilders ஆகிய இரண்டு நிறுவனங்களுடன் தலா 15,000 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய கப்பல் கட்டும் தளங்கள் அமைக்க தமிழ்நாடு அரசு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது. இத்திட்டங்கள், தமிழ்நாட்டின் கடலோரப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய அம்சமாக விளங்கி மாநிலத்தை கப்பல் உற்பத்திக்கான உலகளாவிய மையமாக மாற்றும். இதன்மூலம் 10,000 பேர் நேரடியாகவும், 50,000 பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறுவார்கள்.

இம்மாநாட்டில் 19 நாடுகள் மற்றும் 300 நிறுவனங்கள் பங்கேற்கின்றன. தொழில்துறை, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையே 5,000க்கும் மேற்பட்ட வணிக சந்திப்பு கூட்டங்களும் நடைபெறுகின்றன. மேலும், இம்மாநாட்டின் கண்காட்சியில் Boeing, Airbus, Lockheed Martin, Dassault Aviation, HAL, BEL, L&T Defence, RollsRoyce, Safran மற்றும் Tata Advanced Systems போன்ற முன்னணி நிறுவனங்கள் ஒன்றிய அரசு நிறுவனங்களான. DRDO, ISRO, HAL, BDL, AVNL மற்றும் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் அரங்குகளை அமைத்துள்ளன.

மேலும், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம், தமிழ்நாடு Unmanned Aerial Vehicle நிறுவனம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் சுற்றுலா துறை இக்கண்காட்சியில் பங்கேற்று, தொழில்துறை வளர்ச்சி, திறன் மேம்பாடு மற்றும் உலகளாவிய தொடர்புகளை ஒருங்கிணைக்கும் மாநிலத்தின் அணுகுமுறையை வெளிப்படுத்தும் வகையில் அரங்குகளை அமைத்துள்ளன. IIT Madras, SRM, Anna University மற்றும் MadeIT Innovation Foundation போன்ற கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களும் பங்கேற்றுள்ளன.

TNDICல் சர்வதேச தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்து இணைந்து செயல்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், TIDCO மூலம் பாதுகாப்பு, சோதனை மற்றும் ஒருங்கிணைப்பு மையங்கள் அமைக்கப்படும் என்றும், புதிய தொழில் துறை பூங்காக்கள் உருவாக்கப்படும் என்றும், AeroDefCon நிகழ்வை இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், 2027இல் நடைபெறும் அடுத்த மாநாடு இன்னும் பெரிய அளவில் நடத்தப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இம்மாநாடு தமிழ்நாட்டின் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கினை அடைந்திட வான்வெளி, பாதுகாப்பு மற்றும் கப்பல் கட்டும் துறைகள் முக்கிய தூண்களாக விளங்கும்.

இம்மாநாட்டில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, கடலோர காவல்படையின் தலைமை இயக்குநர் பரமேஷ் சிவமணி, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் விஞ்ஞானி டாக்டர் பி.கே. தாஸ், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் தாரேஷ் அகமது, இ.ஆ.ப., டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., BCI Aerospace முதன்மை செயல் அலுவலர் ஸ்டீபன் காஸ்டெட், ஏர் கமாண்டர் சர்மா, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் முன்னாள் தலைவர் எஸ். கிறிஸ்டோபர், GIL India தலைவர் பாலசுப்பிரமணியன், இந்திய கடற்படை அதிகாரி சதீஷ் ஷினாய், இந்திய ஆயுதப்படைகள், பாதுகாப்பு பொது துறை நிறுவனங்கள், ஸ்டார்ட் அப்கள் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அகில இந்திய தொழிற் தேர்வில்

# இந்திய அளவில் முதலிடம் பெற்ற 40 மாணவ - மாணவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, அக்.8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கட்டுமானம், கம்பி வளைப்பு, தச்சு, மின்பணியாளர், பிளம்பர், வெல்டர், வர்ணம் பூசுதல், ஏசி மெக்கானிக், கண்ணாடி அமைத்தல், சலவைக்கல் ஒட்டுதல் உள்ளிட்ட தொழிற்பிரிவுகளில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். மேலும், அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று 2025 ஆம் ஆண்டு அகில இந்திய தொழிற் தேர்வில், இந்திய அளவில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் முதலிடம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 மாணவ மாணவியர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

**திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு சான்றிதழ்**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கட்டுமானம், கம்பி வளைப்பு, தச்சு, மின்பணி யாளர், பிளம்பர், வெல்டர், வர்ணம் பூசுதல், ஏசி மெக்கானிக், கண்ணாடி அமைத்தல், சலவைக்கல் ஒட்டுதல் உள்ளிட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளித்திட 50,000 கட்டுமான தொழிலாளர்களுக்கு ஊதியத் தொகையாக நாளொன்றிற்கு தலா ரூ.800/ வீதம், ரூ.28 கோடி உட்பட மொத்தம் ரூ.45.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில், முதல் அணிக்கான பயிற்சி பல்வேறு அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 22.09.2025 முதல் 28.09.2025 வரை நடைபெற்றது. தற்போது 65 தொழிற்பயிற்சி நிலையங்களில் தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சியின் மூலம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு புதிய தொழில் நுட்பங்கள், டிஜிட்டல் அளவிடும் கருவிகள் பயன்பாடு, சுய தொழில் வாய்ப்பு, பணியிடப் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் பேணுதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிகளைப் பெற்றதன் மூலம் கட்டுமானத் தொழிலாளர்கள் தங்களது திறனையும் தொழில் தரத்தையும் மேம்படுத்திக்கொள்ள தமிழ்நாடு அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சியினை நிறைவு செய்த கட்டுமான தொழிலாளர்களுக்கு இப்பயிற்சியில் கலந்து கொண்டதற்காக ஊதியத் தொகையாக நாளொன்றுக்கு ரூ.800/ வீதம் 7 நாட்கள் பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ.5600/ மற்றும் பயிற்சி நிறைவு செய்ததற்கான சான்றிதழ்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**அகில இந்திய தொழிற் தேர்வில் இந்திய அளவில் முதலிடம் பெற்ற 40 மாணவ - மாணவியர் சந்தித்து வாழ்த்து!**

தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான அகில இந்திய தொழிற் தேர்வுகள் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்து ஒரே தேர்வாக நடத்தப்படுகிறது. 2024-2025ஆம் கல்வியாண்டு தேர்வு, 28.07.2025 முதல் 20.08.2025 வரை நடைபெற்றது.

இத்தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 27,480 அரசு தொழிற்பயிற்சி மாணவ-மாணவியரும் மற்றும் 19,280 தனியார் தொழிற்பயிற்சி மாணவ-மாணவியரும், என மொத்தம் 46,760 மாணவமாணவியர் பங்கேற்றனர். இத்தேர்வில் சாதனை படைக்கும் விதமாக 26,447 (96.24%) அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவியரும், 16,621 (86.21%) தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவ-மாணவியரும், என மொத்தம் 43,068 (92.10%) மாணவ-மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் இயங்கி வரும் 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 2877.43 கோடி ரூபாய் செலவில் டாடா டெக்னாலஜீஸ் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து தொழில் 4.0 தரத்திலான தொழில் நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்பட்டன. இத்தொழில் நுட்ப மையங்களில் Industrial Robotics and Digital Manufacturing, Manufacturing Process Control and Automation, Basic Designer and Virtual Verifier, Advanced CNC Machining Technician, Mechanic Electric Vehicle ஆகிய தொழிற்பிரிவுகளில் பயின்ற 11 மாணவ-மாணவியர் உட்பட பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயின்ற 40 மாணவ-மாணவியர் 2025ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளனர். இதில், 38 அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவ-மாணவியரும் 2 தனியார் தொழிற் பயிற்சி நிலைய மாணவமாணவியரும் அடங்குவர். தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த 40 மாணவ-மாணவியரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்த நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ.வீர ராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் பொன் குமார், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை கூடுதல் இயக்குநர் (கைவினைஞர் பயிற்சித் திட்டம்) தி. ராஜசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை அவிநாசி மேம்பாலத்திற்கு

# 'ஜி.டி. நாயுடு' பெயர் சூட்டி பெருமை சேர்த்த முதல்வருக்கு நன்றி!

## முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா. கார்த்திக் அறிக்கை!



கோவை, அக்.8-

கோவை அவினாசி சாலை உயர்மட்ட மேம்பாலத்திற்கு இந்தியாவின் எடிசன் என்று புகழப்பட்ட ஜி.டி. நாயுடு. அவர்களின் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்த கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் - தி.மு.க. தீர்மானக்குழு செயலாளர் நா. கார்த்திக் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் - தி.மு.க. தீர்மானக்குழு செயலாளர் நா. கார்த்திக் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட சூரியன், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், 'எல்லார்க்கும் எல்லாம்' என்பதே இந்த திராவிட மாடல் கோட்பாடு என்று உரக்க கூறி அதை செயல்படுத்தியவர் நமது திராவிட நாயகன் அன்புத்தளபதி அவர்கள்

கோவை மக்களின் நீண்டநாள் கோரிக்கையான 'அவினாசி சாலை உயர் மட்ட மேம்பாலத்தை நாளை 9.10.2025 வியாழன் அன்று மக்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்க உள்ளார்.

ரூ.1,791 கோடியில் கட்டப்பட்ட அவினாசி சாலை மேம்பாலம் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை உயர்மட்டச் சாலை பாலத்தின் மொத்த நீளம் 10.10 கி.மீ. பாலத்திற்கு கோவை என்றாலே புதுமை என்பதற்கேற்ப, புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளால் பெருமை சேர்த்த இந்தியாவின் எடிசன், தந்தை பெரியாரின் உற்ற கொள்கைத் தோழர் ஜி.டி.நாயுடு அவர்களின் பெயரை இந்த மேம்பாலத்துக்குச் சூட்டப்படும் என்று அறிவித்த கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கு கோவை பொதுமக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் மேல்சேவூர் ஊராட்சி அம்மன்குளத்துமேடுகிராமத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தான்கோத் திட்டத்தின் மூலம் 60 லட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு சேவை மைய கட்டிடத்தை சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் பல்நோக்கு மைய கட்டிடத்தினை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதை அடுத்துபல்நோக்கு மைய கட்டிடத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குத்து விளக்கு ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்புரை ஆற்றினார். உடன்வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுத ரவிக்குமார், தாட்கோசெயற்பொறியாளர் அன்புச்செல்வி தாட்கோ அலுவலர் ரமேஷ்,ஒன்றிய செயலாளர்கள் மொடையூர் துரை, இளம்வழுதி,ஒன்றிய கவுன்சிலர் கவுன்சிலர் மாரிமுத்து,ஊராட்சி மன்ற தலைவர் ராஜகோபால் உள்ளனர்.

### வல்லம் ஒன்றியத்தில்

# ரூ.68 கோடியில் புதிய கட்டடம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

செஞ்சி அக்.8-

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் மேல்சேவூர் ஊராட்சி அம்மன்குளத்துமேடுகிராமத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத்துறை சார்பில் தான்கோத் திட்டத்தின் மூலம் 60 லட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு சேவை மைய கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது சென்னை பல்நோக்கு மைய கட்டிடத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குத்து விளக்கு ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து ஏழை எளிய மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.அந்த வகையில் பழங்குடியின வகுப்பைச்சேர்ந்த மாணவ மாணவிகள் வெளிநாடுகளுக்கு சென்று படிப்பதற்காக 68 கோடி ரூபாய் முதலமைச்சர் ஒதுக்கீடு உள்ளார். சுமார் 171 பேர் வெளி நாடுகளில் சென்று படித்து வருகின்றனர்.மேலும் விளிம்பு நிலையில் உள்ள மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்கு எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் அந்த வகையில் வல்லம் ஒன்றியம் அம்மன் குளத்து மேடு கிராமத்தில் வசிக்கும் மலைவாழ் மக்கள் தங்கள் பொருளாதாரம் உயர்வதற்காக பல்நோக்கு மைய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது இந்த மையத்தில் திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள், கைத்தொழில் செய்வதற்கான அறைகள், வியாபாரம் செய்வதற்கானவழி வகைகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் மானியத்துடன் கூடிய கடன் உதவி கள் தாட்கோவில் வழங்கப்பட உள்ளது.விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு இது போன்ற திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார் இது போன்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நீங்கள் என்றென்றைக்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,தாட்கோ செயற்பொறியாளர் அன்பு செல்வி,தாட்கோ மேலாளர் ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் மொடையூர்துரை, இளம்வமுதி, ஒன்றிய கவுன்சிலர் கம்சலா மாரிமுத்து, ஊராட்சி மன்ற தலைவர்ராஜகோபால்துணைத் தலைவர் பரிதா அன்வர்,ஒன்றிய நிர்வாகிகள் கிருஷ்ணமூர்த்தி, பாண்டியராஜன், லட்சுமணன், அணி அமைப்பாளர்கள் பிரபு ,பிரபா,கிளைக் கழக நிர்வாகிகள் ரமேஷ், அன்பு, சிவக்குமார் ,ரமேஷ்,கார்த்திக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சென்னை தெற்கு மாவட்டம்

## வேளச்சேரி கிழக்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் துரைகபிலன் அவர்களுக்கு பதிலாக, திரு. **எம். விநாயகமூர்த்தி** (69/44-1பி, தாமோதரன் பிரதான சாலை, அடையாறு, சென்னை - 600 020) அவர்கள் வேளச்சேரி கிழக்கு பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 07.10.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## சென்னை தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எம்.எஸ். ஹரிபாபு அவர்கள் மாநில துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக **துரை. கபிலன்** (32/99, கிழக்குக் கடற்கரை சாலை, திருவான்மியூர், சென்னை - 600 041) அவர்கள் சென்னை தெற்கு மாவட்ட கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 07.10.2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
கலை இலக்கியப்
பகுத்தறிவு பேரவை